# பண்டைத்தமிழர்களின் போர் மரபுகளும் நெறிகளும்

49

**முனைவர் மா.சங்கரேஸ்வரி**

**உதவிப்பேராசிரியர்,**

**கோ.வெங்கடசுவாமி நாயுடு கல்லூரி (தன்னாட்சி),**

**கோவில்பட்டி**

**ஆய்வுச்சுருக்கம்**

போர் நிகழ முக்கிய காரணம் ஆசையாகும். சங்க காலத்தில் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை இவற்றின் காரணமாகவே போர் நிகழ்ந்தது. ஆசை காரணமாக இருப்பினும் இவையெல்லாம் வீரத்தின் வெளிப்பாடாக அமைந்தது எனலாம். பெரும்பான்மை போர் ஒரு மரபுப்படி அறநெறிப்படி அக்காலத்தில் நடைபெற்றது. நெறிகள் என்பது சமுதாயத்தில் எவ்வாறு மனிதன் நடந்து கொள்ள வேண்டும் என்று வழிப்படுத்துவது ஆகும். நெறிகளும் மரபுகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருக்கின்றது. மனிதன் பின்பற்றிய நெறிகள் தான் மரபுகளாக கடைப்பிடிக்கப்படுகின்றன. மரபுகள் என்பது வழிவழியாகப் பின்பற்றக்கூடியவை. சங்க காலத்தில் போர் நெறிகளை மூன்றாகப் பிரிக்கலாம். போருக்கு முன் நடக்கும் நெறிகள், போரின் போது நடக்கும் நெறிகள் போருக்குப் பின் நடக்கும் நெறிகள் ஆகும். போர் என்பது ஒரு நாட்டின் அமைதியைக் குலைப்பதாக இருப்பினும் அவற்றிலும் அறநெறிகள் கடைப்பிடிக்கப்பட்டன. ஆனால் இக்காலத்தில் போர்மரபுகளையும் நெறிகளையும் யாரும் பின்பற்றுவது இல்லை.

**முன்னுரை**

சங்க கால மக்கள் வாழ்க்கையில் காதலும் வீரமும் நீங்கா இடம் பெற்றிருந்தன. இவ்விரண்டும் ஆண், பெண் இருபாலருக்கும் உரித்தானதாக இருந்தது. ஆடவர் வீரம் போர்க்களத்தில் வெளிப்பட்டு இருந்தது. பெண்கள் போர்க்களம் சென்றதாகச் சங்க இலக்கியம் குறிப்பிடவில்லை. ஆனால் பாசறையில் தங்கியிருந்ததாக இலக்கியம் குறிப்பிடுகின்றது. ஆண்கள் போருக்குச் சென்றாலும் பெண்களுக்குள்ளும் வீரம் மேலோங்கி இருந்தது. தன்னுடைய மகனுக்கு வாளினை கையில் கொடுத்து போர்க்களம் அனுப்பிய தாய் பற்றி புறநானூறு எடுத்துரைக்கின்றது. அக்காலத்தில் போர் நெறிகளை மன்னர்கள், வீரர்கள், மக்கள் பின்பற்றிய விதத்தை இங்குக் காண்போம்.

**மக்களை பாதுகாத்தல்**

கோ, இறை, என்ற சொற்கள் அரசனையும் இறைவனையும் குறிக்கிறது. ஏனெனில் உலக மக்களை எவ்வித இன்னல்களிலிருந்தும் பாதுகாப்பது இறைவனது கடமையாகும். அதைப்போன்று ஒரு நாட்டில் உள்ள மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசனுக்கு உண்டு. அதனால்தான் அரசன், இறைவன் இருக்குமிடத்தை கோயில் என்று குறிப்பிடுகின்றனர். போர் நடக்கும் போது மக்களுக்கு

எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் மன்னன் பாதுகாத்து நின்றான். போரில் உயிர்ச்சேதம் ஏற்படுவதுண்டு. ஆனால் அக்காலத்தில் வீரர்கள் போர்க்களத்தில் இறப்பினும் அவர்கள் தாமாகவே வீரத்தை வெளிப்படுத்தும் நோக்கில் தன்னுயிரை துறக்க முன்வருகின்றனர்.

**போர்ச் செய்தியை அறிவித்தல்**

ஒரு நாட்டில் என்ன நடக்கிறது என்று மன்னனுக்கு மட்டுமில்லை மக்களுக்கும் தெரிய வேண்டும். ஒரு நாட்டின் மீது போர்தொடுத்துச் செல்லும் முன்பு தன் நாட்டு மக்களுக்கும், வீரர்களுக்கும் போர்ச்செய்தியை மன்னன் அறிவிக்க வேண்டும். போரால் பல மாற்றங்களும் விளைவுகளும் ஏற்படக்கூடும். முன்னெச்சாரிக்கையாக சொல்வது சாலச் சிறந்தது. போர் நடக்கும் போது பாதுகாப்பின்றி இருந்தார்கள் என்றால் அவர்கள் உயிருக்கு ஆபத்து நேரிடும். ஆதலால் போர்ச் செய்தியை மக்கள் அறிய வேண்டும் என்று மன்னன் முரசறைந்து தெரிவித்தான். முரசறைதல் அக்காலத்தில் வழக்கத்தில் இருந்தது. அதாவது முரசு அறைந்து மக்களுக்கு செய்தியை கொண்டு போய் சேர்ப்பதாகும். இதனை,

“ஆவும், ஆன் இயற் பார்ப்பன மாக்களும்,

பெண்டிரும், பிணியுடையீரும், பேணித்

தென் புல வாழ்நர்க்கு அருங் கடன் இறுக்கும்

பொன் போல் புதல்வர்ப் பெறாஅதீரும்,

எம் அம்பு கடி விடுதும், நும் அரண் சேர்மின்” (புறம்.,9:1 - 5)

என்ற அடிகள் விளக்குகின்றன. இன்றைய காலத்தில் இரு நாட்டிற்கிடையே சண்டை மூளும் போது மக்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்படுகின்றனர். ஏனெனில் திடீரென்று எதிர்பாராதவண்ணம் போர் தொடுப்பதே காரணமாகும். நினைத்த நேரத்தில் தங்களுக்கு வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு வெற்றியை பெற நெறிமுறையின்றி போரிடுகின்றனர்.

**போர்க்கருவிகளைச் சிறப்பு செய்தல்**

போர்க்குச் செல்லும் முன்பு போரில் பயன்படுத்தக்கூடிய ஆயுதங்களை சிறப்புச்செய்வது வழக்கமாகும். இதனைப் ‘புறவீடு செய்தல்’ என்று கூறுவர். போருக்குச் செல்லும் முன்பு மன்னனின் வெண்கொற்றகுடை, அவனது வாள் இவற்றை அரண்மனை விட்டு வெளியே சுற்றி வரச் செய்தல் ஆகும். ஒரு காரியம் செய்யும் முன் அக்காரியம் நிறைவேறவேண்டுமென்றால் அக்காரியத்திற்கு உறுதுணையாக இருக்கும் பொருட்களை சிறப்பு செய்வது வழக்கமாகும். அதனால் தான் மன்னன் போரில் வெற்றியை தரக்கூடிய வாளுக்கு முன்னுரிமை கொடுத்தான். வீரர்களின் ஆயுதங்கள் சிறப்புச் செய்யதாகக் கூறப்படவில்லை. மன்னனின் வாள், வெண்கொற்றகுடை அவை மட்டுமே புறவீடு

செய்யப்பட்டது. முரசு என்பது மன்னனின் வெற்றியைப் பறை சாற்றுகின்ற கருவியாகும். அந்த முரசையும் சிறப்பு செய்தான் மன்னன் என்பதை,

“மாசு அற விசித்த வார்புறு வள்பின்

மை படு மருங்குல் பொலிய, மஞ்ஞை

ஒலி நெடும் பீலி ஒண் பொறி மணித்தார்

பொலங் குழை உழிஞையொடு, பொலியச் சூட்டி

குருதி வேட்கை உரு கெழு முரசம்” (புறம்.,50:1 - 5)

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன.

**பூச்சூடுதல் போர் செய்தல்**

பூச்சூடுதல் என்பது இன்றைய காலத்தில் பெண்களுக்கு மட்டுமே உரியதாகக் கருதப்படுகிறது. ஆனால் அன்றைய காலத்தில் பூச்சூடுதல் ஆண், பெண் இருபாலருக்கும் உரியதாக இருந்தது. சங்க காலத்தில் பெண்களில் திருமணமானவர்கள் மட்டுமே பூச்சூட வேண்டும். ஆண்கள் போர்க்காலங்களில் பூச்சூடிக் கொண்டு தான் போர் செய்ய வேண்டும். மாலையாகவோ கண்ணியாகவோ சூட வேண்டும். இது தன் அடையாளத்தைக் காட்டுவதைக் குறிக்கின்றது. ஒவ்வொரு அரசனும் தனக்கென்று ஒரு அடையாளப் பூவை அங்கீகாரமாகக் கொண்டுள்ளான். சேரர்க்கு பனம் பூ, சோழருக்கு அத்திப்பூ, பாண்டியருக்கு வேப்பம்பூ ஆகும். பேரரசர்களுக்கும் மட்டுமின்றி சிற்றரசர்களுக்கும் அடையாள பூ உண்டு. தொல்காப்பியர் புறத்திணையை ஏழாகப் பகுத்துக் கூறியுள்ளார். அவற்றில் வெட்சி என்பது ஆநிரை கவர்தல் ஆகும். ஆநிரை கவரச் செல்லும் முன் வெட்சி வீரர்கள் தங்களுடையான அடையாளமான வெட்சி பூவை அணிந்து செல்வர். இதைப்போன்று ஒவ்வொரு திணையிலும் பூச்சூடி போருக்குச் செல்வது மரபாக இருந்தது. ஆனால் இந்தப் பூக்களைப் போருக்களத்திற்கு சூடிச் சென்றால் பூவானது வாடி விடும். போர் புரியும் போது கீழே விழுந்து விடும். இருப்பினும் தனக்கென்று ஒரு அடையாளத்தையும் தன் வீரர்கள் தனியாக தெரிய வேண்டும் என்பதற்காகவும் பூச்சூடிச் செல்வது மரபாக கொண்டிருந்தனர். போர்க்களத்தில் வீரர் ஒருவன் அணிந்திருந்த நொச்சி மாலை அறுபட்டு கீழே வீழ்ந்தது. அவற்றில் குருதி பட்டிருந்ததால் ஊன் என்று கருதி பருந்து கவர்ந்து செல்ல வந்தது. இதனை,

“………………………… இனியே

வெருவரு குருதியொடு மயங்கி, உருவு கரந்து,

ஒறுவாள் பட்ட தெரியல் ஊன் செத்து” (புறம்,271:4 - 6)

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன. மேலும், பொன்னால் செய்யப்பட்ட பூக்களையும் அணிந்தனர். போருக்குச் செல்லும் முன் மன்னன் தன் வீரர்களுக்கு தன் பூத்தருதல் நிகழ்ச்சி ஒன்று நடக்கும். இவற்றில் பொன்னாலான பூக்களை வீரர்களுக்கு கொடுத்தான். இதனை,

"பொலந் தோட்டுப் பைந் தும்பை

மிசை அலங்கு உளைய பனைப் போழ் செரிஇ,

சில மாந்தர் வெறிக் குரவை" (புறம்.,22: 20 - 22)

"நிலம் தலைக்கொண்ட பொலம் பூந் தும்பை

ஈர் ஐம்பதின்மரும் பொருது, களத்து ஒழிய" (புறம்.,2: 14 - 15)

"பொலந் பைந் தார் கெடப் பரிதலின்

களன் உழந்து அசைஇய மறுக் குளம்பினவே" (புறம்.,97:12 - 13)

என்ற அடிகள் வழி அறியலாம்.

**தூது அனுப்புதல்**

தூது என்பது சங்க காலத்தில் அக, புற வாழ்க்கையில் நடைபெறக்கூடிய ஒன்றாகும். ஒருவர் தான் விரும்பிய செய்தியை உரியவரிடம் தெரிவிக்க இன்னொருவரை அனுப்புவது தூதாகும். புற வாழ்க்கையில் போர் செய்வதற்கு முன்போ, போர் நடக்கும் போதோ தூது அனுப்புவர். தூதுவன் சரியான முறையில் தூதாகச் சென்றால் இரு நாட்டுக்குமிடையே நடைபெறக்கூடிய போரைத் தவிர்க்க முடியும். போர் குறித்து நின்ற ஒர் அரசனிடம் அந்தணன் ஒருவன் தூதாகச் சென்றான். "ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேவன" என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. தூது சென்ற அந்தணனின் தோற்றம், எளிமையாகவும் தளர்ந்த நடையாகவும் இருந்தது. அவனது தோற்றமும் கூறிய சொல்வன்மையும் மன்னன் போரைத் தவிர்க்க காரணமாக அமைந்தது. இதனை,

"வயலைக் கொடியின் வாடிய மருங்குல்,

உயவல் ஊர்தி, பயலைப் பார்ப்பான்

எல்லிவந்து நில்லாது புக்கு,

சொல்லிய சொல்லோ சிலவே அதற்கே

ஏணியும் சீப்பும் மாற்றி

மாண்வினை யானையும் மணி களைந்னவே” (புறம்.,305:1 - 6)

என்ற அடிகள் குறிப்பிடுகின்றன. மேலும், ஒரு நாட்டின் பொருட்டு தூதாகச் சென்றவனைக் கொல்லும் பழக்கம் பண்டைக்காலத்தில் இல்லை. தூதுவனை அவமானப்படுத்தவும் கூடாது. தூதுவர்களிடையே ஏற்றத்தாழ்வு பார்க்கக் கூடாது. சரியான முறையில் அவனை வரவேற்று தூதைப் பெற்றுக் கொள்ள வேண்டும். கம்பராமாயணத்தில் ராமன் பொருட்டு அனுமன் தூது சென்றான். அப்போது அவனுக்கு அங்கு சரியான மரியாதை கொடுக்கவில்லை. அவனைத் துன்புறுத்தவும் செய்தனர். இது போர் மூள்வதற்கு ஒரு காரணமாக அமைந்தது. அன்றைக்கு தூதுவனான அனுமன் செய்தியை இராவணன் ஏற்றிருந்தால் போர் நடந்திருக்காது.

**ஒற்று அறிதல்**

ஒற்றாடல் என்பது போரின் போது நிகழும் நிகழ்ச்சி ஆகும். இதனைச் செய்பவன் ஒற்றன் ஆவான். ஒற்றன் வேறு தூதன் வேறு. தூதன் நேராகச் சென்று மன்னனிடம் வந்த செய்தியை கூறுபவன். ஆனால் ஒற்றன் அப்படியல்ல. யாரும் அறியாதவாறு பகை நாட்டின் நிலைமைகளை அறிந்து வருபவன். சில வேளைகளில் ஒற்றன் தூதானாகச் செல்வது உண்டு. ஒற்று அறிதல் என்பது அவசியமாகும். தன் நாட்டை காக்கவும் எதிரிகளை வீழ்த்தவும் ஒற்றாடல் தேவை. போர் செய்யப் போகும் முன் ஒற்றாடல் வேண்டும். ஏனெனில் ஒற்றறிதல் நம் வெற்றி தோல்வியை தீர்மானிக்கும். வெட்சித்திணையில் ஆநிரைக் கவரும் முன் ஆநிரை எங்குள்ளது, அவற்றைப் பாதுகாக்கும் முறை, எத்தனை வீரர்கள் காவல் காக்கின்றனர் என்பதை அறிந்த பின்பே ஆநிரைக் கவரச் சென்றனர். ஒற்றனைக் கொல்வது என்பது கூடாது. இளத்தத்தன் என்ற புலவன் நெடுங்கிள்ளியை நாடி பரிசில் பெற வந்தான். ஆனால் அவனை ஒற்றன் என்று கருதி கொல்ல நினைத்தான். கோவூர் கிழார் அவனைத் தடுத்து ஒற்றனை கொல்வது அறமன்று என்று அறிவுரை கூறினான். இதனை,

“வரிசைக்கு வருந்தும் இப் பரிசில் வாழ்க்கை

பிறர்க்குத் தீது அறிந்ததன்றோ? இன்றே திறப்பட

நண்ணார் நாண, அண்ணாந்து ஏகி,

ஆங்க இனிது ஒழுகின் அல்லது, ஓங்கு புகழ்

மண் ஆள் செல்வம் எய்திய

நும் ஓர் அன்ன செம்மலும் உடைத்தே” (புறம்.,47: 6 - 11)

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன.

**போரிடும் காலமும் நேரமும்**

போரிடுவதற்கு என்று காலம் நேரம் பார்த்து பண்டைத்தமிழ் போர் செய்தனர். நல்லநாள், நல்ல நேரம் பார்த்து போரில் ஈடுபட்டனர். முல்லைப்பாட்டில் போருக்காகச் செல்லும் போது நாழிகை கணக்கன் என்பவனை உடன் அழைத்துச் சென்றுள்ளான் மன்னன். ஏனெனில் அவன் தான் போர் செய்வதற்குரிய காலம் நேரம் குறித்து தருவதாகும். அதுமட்டுமின்றி போர் பகலில் மட்டுமே நடைபெறும். இரவில் நடைபெறாது. அதாவது சூரியன் உதயமாகும் போது போர் தொடங்கி அஸ்தமிக்கும் போது போர் நிறுத்தப்படவேண்டும். இரவும் பகல் என்று பாராமல் போர் செய்யக்கூடாது. போருக்காகச் செல்லும் போது பகலில் போரிட்டுவிட்டு இரவில் நாட்டின் எல்லையில் பாசறை அமைத்து தாங்குவது உண்டு. பின்பு மறுநாள் போர் புரிந்ததாக சங்கப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. இதனை,

"கடல் கிளர்ந்தன்ன கட்டூர் நாப்பண்,

வெந்து வாய் மடிந்து வேல் தலைப் பெயரி," (புறம்.,295: 1 - 2)

"கண்கூடு இறுத்த கடல் மருள் பாசறை" (புறம்.,294: 2)

என்ற அடிகள் வழி அறியலாம். இன்றைய காலத்தில் போர் தொடுக்கும் நாடுகள் இரவு பகல் என்று பாராமல் தொடர்ந்து போரிட்டுக் கொண்டு இருக்கின்றன. சான்றாக ரஷ்யா, உக்ரையன், சூடான் உள்நாட்டு போர்களைக் கூறலாம். இரவில் குண்டுமழை பொழிதல் குறிப்பிடத்தக்கதாகும்.

**நிமித்தம் பார்த்தல்**

நிமித்தம் என்பது சகுனத்தைக் குறிக்கின்றது. பறவைகள், விலங்குகள், தாவரங்கள் இவற்றின் வழி மனிதர்கள் அக்காலத்தில் நிமித்தம் பார்த்தனர். சகுனம் பார்ப்பது ஒரு நம்பிக்கை, பழக்கவழக்கமாக இருப்பினும் இதுவும் போர் நெறிகளில் ஒன்றாகக் கருதினர். எந்தவொரு நிகழ்ச்சி செய்தாலும் நல்ல நாள் பார்த்து செய்யும் பழக்கம் நம்மிடையே உள்ளது. உன்னமரம் புறவாழ்க்கையில் போருக்காகச் செல்லும் போது நிமித்தம் பார்க்கும் மரமாகக் கொள்ளப்பட்டது. பூப்பூத்து தழைத்து இருந்தால் போரில் வெற்றி கிட்டும் என்பது உறுதியாகும். இதனை,

"பொன்னி னன்ன பூவிற் சிறியிலைப்

புன் னாலுன்னத்துப் பகைவ னென்கோ" (பதிற்று.,61:5 - 6)

என்ற அடிகள் விளக்குகின்றன.

**காவல் மரத்தை வெட்டுதல்**

ஒரு நாட்டின் மீது படையெடுத்துச் செல்லும் போது அந்நாட்டின் மன்னனுக்குரிய காவல் மரத்தை வெட்டுவது இயல்பாகும். ஏனெனில் காவல் மரம் என்பது அரசனுக்கு உயிர் போன்றதாகும்.

அம்மரத்தை வீழ்த்தினால் அந்நாட்டின் மன்னனை வீழ்த்துவதற்குச் சமமாகக் கருதப்படும். அதுமட்டுமின்றி காவல்மரத்தை வெட்டுவதன் மூலம் அம்மன்னனைப் போருக்கு அழைப்பதற்கு உரியதாகும்.

**புறங்காட்டாமல் இருத்தல்**

போர்க்களத்தில் புறமுதுகை காட்டல் கூடாது. போரில் புறமுதுகைக் காட்டுவது அவனது கோழைத்தனத்தைக் குறிக்கின்றது. புறமுதுகைக் காட்டாதவர்களை இந்த உலகம் புகழ்ந்து கூறுகின்றது. திருமுடிக்காரி முன்னோரை நப்பசலையாரும் நாஞ்சில் வள்ளுவன் முன்னோரை மருதன் இளநகனாரும் புகழ்ந்துரைக்கின்றனர். இதனை,

"ஓடாப் பூட்கை உரவோன் மருக!" (புறம்.,126:4)

"ஓடாப் பூட்கை உரவோன் மருக!"

உயர் சிமைய உழாஅ நாஞ்சில் பொருந" (புறம்.,139: 7 - 8)

என்ற அடிகள் வழி அறியலாம். விழுப்புண் பெறுவதை பெரும் பேறாகக் கருதினர். விழுப்புண் என்பது போரில் ஏற்படக்கூடிய காயங்களைக் குறிக்கின்றது. போரில் காயம் ஏற்படுவது இயற்கை. ஆனால் முகத்திலும் மார்பிலும் படக்கூடிய புண்களையே விழுப்புண் என்று கூறுகின்றனர். இதனை,

"போர் அடு தானை, எவ்வி மார்பின்

எஃகுறு விழுப்புண் பல" (புறம்,233:6 - 7)

"இறை உறு விழுமம் தாங்கி, அமரகத்து

இரும்பு சுவைக் கொண்ட விழுப்புண் நோய் தீர்ந்

மருந்து கொள் மரத்தின் வாள் வடு மயங்கி

வடு இன்று வடிந்த யாக்கையன்" (புறம்.,180:3 - 6)

என்ற அடிகள் விளக்குகின்றன. மேலும், விழுப்புண்ணாவது ஒருவருடன் இன்னொருவர் நேருக்கு நேராக நின்று போரிடும் போது ஏற்படும். மறைந்து நின்று போரிட்டலோ புறமுதுகு காட்டினலோ ஏற்படாது. போர்க்களத்தில் தன் மகன் இறந்து கிடக்கின்றான் என்பதை அறிந்த தாய் அவன் இறந்து விட்டான் என்று வருத்தம் கொள்ளவில்லை. புறமுதுகிட்டு இறந்தானா என்று அஞ்சி ஒவ்வொரு பிணமாக பார்க்கின்றாள். அப்போது தன் மகன் உடலைப் பார்த்து மகிழ்ச்சி கொள்கின்றாள். இதனை,

"செங்களம் துழவுவோள், சிதைந்து வேறு ஆகிய

படு மகன் கிடக்கை காணூஉ,

ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே!" புறம்., 278:7 - 9)

என்ற அடிகள் வழி அறியலாம். இப்புவியில் பிறந்த ஆண்மகன் விழுப்புண் பெற்று இறப்பது தான் சாலச் சிறந்தது என்று கருதினர். ஆதலால்தான் குழந்தை இறந்தால் கூட அக்குழந்தையின் மார்பில் வாளால் கீறி புதைத்தனர் என்று புறநானூறு குறிப்பிடுகின்றது. விழுப்புண் பெறாத நாட்களை வீண் நாட்கள் என்று திருக்குறள் கூறுவதை,

"விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்

வைக்கும் நாளை எடுத்து" (குறள்.,776)

என்ற குறளடிகள் வழி அறிய முடிகிறது.

**நிற்கதியற்றவனை துன்புறுத்தக்கூடாது**

போர் செய்யும் போது நேருக்கு நேராக நின்று போர் செய்வதுதான் மரபாகும். மறைந்திருந்து தாக்குவது போர் மரபன்று. போரில் ஒருவர் வெற்றி பெறுவதும், மற்றவர் தோல்வியடைவதும் இயற்கை. வெற்றி பெற்றவன் வலிமையுடையவனாகவும் தோற்றவன் வலிமையற்றவனாகவும் கருதக்கூடும். இந்த நிலையில் மட்டுமே வலியவன், மெலியவன் என்று பார்க்க வேண்டும். போரில் எவ்வித ஆயுதமுமின்றி இருப்பவர்களிடம் போர் செய்யக்கூடாது. தன்னால் முடியாது என்று பின்வாங்கி செல்பவர்களை துரத்தி சென்று கொல்லக்கூடாது. இது அறத்திற்கும், போர் நெறிமுறைக்கும் புறம்பான செயலாகும். இதனை,

"வாஅள் வாய்த்த வடு ஆழ் யாக்கையொடு

கேள்விக்கு இனியை, கட்கு இன்னாயே!"

அவரே நிற் காணின் புறம் கொடுத்தலின்

ஊறு அறியா மெய் யாக்கையாடு

கண்ணுக்கு இனியர்" (புறம்.,167:3 - 7)

என்ற அடிகள் குறிப்பிடுகின்றன.

**நடுகல் வழிபாடு**

நடுகல் வழிபாடு சங்க காலத்தில் வழக்கத்தில் இருந்தது. இது மரபாகவும் உள்ளது. நடுகல் என்பது போரில் இறந்துபட்ட வீரர்களுக்கு எடுப்பதாகும். ஆநிரைகளைக் கவர்ந்து சென்ற வெட்சி வீரர்களிடமிருந்து ஆநிரையை மீட்டு அவர்களோடு போரிட்டு இறந்த வீரனுக்காக எடுக்கப்பட்டது.

இதனை,

"பரலுடை மருங்கின் பதுக்கை சேர்த்தி

மரல் வகுத்து தொடுத்த செம் பூங் கண்ணியொடு

அணி மயிற் பீலி சூட்டி, பெயர் பொறித்து,

இனி நட்டனரே, கல்லும்" (புறம்.,264:1 - 4)

என்ற அடிகள் வழி அறியலாம். மேலும் இவ்வடிகளில் இக்கல்லில் வீரனது பெயர் பொறிக்கப்பட்டு இருந்ததையும் கூறுகின்றது. இவ்வழக்கம் இப்பொழுதும் நடைமுறையில் உள்ளது.

**முடிவுரை**

போர் பற்றிய செய்தியை அறிவித்தல், போர் கருவிகளை சிறப்புச் செய்தல், பூச்சூடுதல், மக்களைப் பாதுகாத்தல், இவையெல்லாம் போருக்க முன்பாகவும், புறமுதுகிடாமை, புறமுதுகிட்டவரை துன்புறுத்தாமை, காவல் மரத்தை வெட்டுதல் இவை போரின் போதும் நடுகல் வைத்தல், போருக்குப் பின்பும் நிகழும் நெறிகளாகச் சங்க காலத்தில் விளங்கியதை அறிய முடிந்தது.

**அடிக்குறிப்பு**

1.சு.அழகேசன்,(ப.ஆ.), தொல்காப்பியம், முதற்பதிப்பு, சுதா பதிப்பகம், தூத்துக்குடி, 2008.

2.இராமகிருட்டிணன், தமிழக வரலாறும் பண்பாடும், ஆறாம்பதிப்பு, சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 2007.

3.கண்ணப்ப முதலியார், வள்ளுவர் கண்ட அரசியல், முதற்பதிப்பு, சென்ட்ரல் புக் டிபோ, சென்னை, 1956.

4.கா.கோவிந்தன், பண்டைத் தமிழர் போர் நெறி, முதற்பதிப்பு, தமிழ்த்தாய் பதிப்பகம், சென்னை, 2003.

5.ந.சுப்பிரமணியன், சங்க கால வாழ்வியல், இரண்டாம் பதிப்பு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை, 2010.

6.அ.ச.ஞானசம்பந்தன், அகமும் புறமும், இரண்டாம் பதிப்பு, கங்கை புத்தக நிலையம், சென்னை, 2001.

7.மு.வரதராசனார், திருக்குறள் தெளிவுரை, 176 ஆவது பதிப்பு, திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாத்த, நூற்பதிப்புக் கழகம், சென்னை, 2004.